**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM.**

| | | |
|---|---|---|
| **MCOP No. 185/2024** | **நாள் – 04.06.2026** | **சாட்சி –எ.ம.சா.1** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | தந்தை பெயர் | கோபால் |
| ஊர் | கும்பகோணம் | தாலுக்கா | கும்பகோணம் |
| தொழில் | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கும்பகோணம். | வயது | 31/2026 |

**முதல் விசாரணை:**

நான் வட்டார போக்குவரத்து அலுவலகம், கும்பகோணத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை கிடைக்கப்பெற்று கோரிய ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1ஆக சாட்சியம் அளிக்கிறேன்.

1. 04.06.2026 தேதியிட்ட நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் வழங்கிய அங்கீகார கடிதம் **சா.சா.ஆ–1.**
2. 05.03.2024 தேதியிட்ட TN 68 AL 8568 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ–2.**
3. வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் விபத்து சமயத்தில் இருந்ததா என்பது குறித்து சாரதி செயலியில் தேடியதற்கான சான்று **சா.சா.ஆ–3.**

விபத்து சமயத்தில் TN 68 AL 8568 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிய அஜய் என்ற ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. அவ்வாறு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதற்காக ரூ. 5,000/– அபராதம் செலுத்தப்பட்டுள்ளது குறித்து சா.சா.ஆ–2ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட அஜய் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பது குறித்து மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தில் சாரதி செயலியில் தேடுதல் மேற்கொண்டு சரிபார்த்தலில் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என தெரியவந்தது. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள எந்த வட்டார போக்குவரத்து

அலுவலகத்திலும் ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தாலும் அந்த செயலியில் தேடும்பொழுது தெரிந்துவிடும். அவ்வாறு செயலியில் தேடிப்பார்த்தலில் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என தெரியவந்தது. பொதுவாக ஒரு நபர் ஒரு ஆதார் கார்டை கொடுத்து அதில் உள்ள விலாசத்தின் அடிப்படையில் ஒரு முறை தான் ஓட்டுனர் உரிமம் பெற முடியும் என்றால் சரிதான். அவ்வாறு இரண்டு ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் சட்டப்படி தவறு என்றால் சரிதான். அவ்வாறு இந்த வழக்கில் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>

TN 68 AL 8568 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி விபத்து சமயத்தில் இருந்தது என்றால் அவ்வாறு காப்பீடு பாலிசி இருந்தது என்று சா.சா.ஆ–2 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுனர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி அழைப்பாணை பெற்றவுடன் அந்த ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் உள்ள முகவரியின் அடிப்படையிலும் சாட்சி அழைப்பாணையில் உள்ள முகவரியின் அடிப்படையிலும் சரிபார்த்தேன் என்றால் சரிதான். உரிய ஆவணத்தின் அடிப்படையில் ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று தேடியிருந்தால் ஓட்டுனர் உரிமம் குறித்து தெரிந்திருக்கும் என்றாலும் நான் சரியான விபரங்களின் அடிப்படையில் தேடாமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

G MANIKANDARAJA

Digitally signed by G MANIKANDARAJA
Date: 2026.06.04 17:54:14 +0530

Additional Chief Judicial Magistrate,
Kumbakonam.